# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590

**விசாரணை நாள் 11.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். S.A 6252/விசாரணை/E/2023**

| | | |
|---|---|---|
| திரு ஆர்.விமல் | .. | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை | .. | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

1) இவ்வழக்கு குறித்த விசாரணை இவ்வாணையத்தில் 10.11.2025 அன்று நடைபெற்று, பிறப்பிக்கப்பட்ட ஆணையில் பத்தி 4(iii)-ல் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:-

> "இவ்வாணையத்தின் 28.10.2025 தேதியிட்ட ஆணையில் பத்தி 2 மற்றும் 3-ல் உள்ள உத்தரவுகளை தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் நிறைவேற்றிவிட்டு அது குறித்த அறிக்கையை 16.02.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது."

2) இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களை, ஆணையம் இன்று (11.06.2026) பரிசீலித்தபோது, மேற்படி ஆணையத்தின் உத்தரவில் பத்தி 4(iii) உத்தரவிட்டுள்ளபடி தாம்பரம் வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து இன்று வரையில் (12.06.2026) எவ்வித அறிக்கையும் ஆணையத்தில் பெறப்படவில்லை என்பது தெரியவருகிறது. ஆகவே,

**இவ்வாணையத்தின் 10.11.2025 நாளிட்ட ஆணையில் பத்தி 4(iii)-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் நிறைவேற்றிவிட்டு அது குறித்த விவர அறிக்கையை இவ்வாணையத்தில் 30.07.2026 அன்று இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.**

3) மேலும், இவ்வாணையத்தின் **10.11.2025 நாளிட்ட** உத்தரவு பத்தி 4 (iv)-படி செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் 13.02.2026 அன்று அறிக்கை சமர்ப்பித்துள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது.

4) தாம்பரம் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர், இவ்வழக்கு குறித்து மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**(ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். S.A. 6252/விசாரணை/E/2023**

**பெறுநர்**

i. மாவட்ட வருவாய் அதிகாரி,
செங்கல்பட்டு மாவட்டம்

ii. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
செங்கல்பட்டு மாவட்டம்

iii. வருவாய் கோட்டாட்சியர்,
தாம்பரம் கோட்டம், செங்கல்பட்டு மாவட்டம்

iv. திரு ஆர்.விமல்,
எண்.6, 1வது மேற்கு தெரு,
இந்திரா நகர், விருகம்பாக்கம்,
சென்னை - 600 092

Copy to File
CR/PA